University of Jaffna Sri Lanka
1990 ... Periodicals
Library

# எந்தவிதசவால்களையும்எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது

## ரஞ்சன் எச்சரிக்கை

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 04 றஜபு பிறை: 19 இதழ்: 03
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-02-1990

(கொழும்பு)

''நாட்டை ஸ்தம்பித நிலை அடையச்செய்யும் எவருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுப்போம்'' என்று வெளி விவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன்விஜயரட்ண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது; அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை கொலைசெய்வதன்மூலம் கொழும்பு நகரத்தை ஸ்தம்பிதமடையச் செய்ய இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' முயற்சித்து வருகிறது.

எந்தவித சவால்களையும் எதிர்நோக்கும் நிலையில் அரசாங்கம இருக்கிறது. கொழும்பில் பாதுகாப்பான இடம் எவருக்கும தேவைப்படுமானல் ஆங்காங்கே ஏற்படுத்தப் பட்டுள்ள அகதி முகாம்களில் அவர்கள் வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கொலை, கற்பழிப்பு மறறும் ஜே. வி. பி.யுடன் சேர்ந்து செயற்பட்ட குற்றங்களுக்கா

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். வைத்தியசாலை 5 மாடி கட்டட வேலைகள் ஸ்தம்பிதம்!

## நிதி நெருக்கடி காரணமாம் அரச அதிகாரிகள் கைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டட வேலைகளைத் தொடருவதற்கு அரச அதிகாரிகள் உதவி அளிக்காததைத் தொடர்ந்து கட்டட வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.**

இதுபற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

''யாழ் போதனா வைத்திய சாலையிலிருந்து அண்மையில் தூதுக்குழு ஒன்று, கொழும்பு சென்று அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, இக்கட்டடத்தைத் தொடர்ந்து கட்டுவதற்கு உதவி செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கு அவர்கள் தம்மால் எதுவித உதவிகளும் செய்ய முடியாதநிலை தற்போது இருப்பதாகவும், இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபரிடமோ அல்லது வடக்கு-கிழக்கு மாகாணசபையிடமோ யாழ். மாவட்ட எம். பி.க்

(8ம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு

## தபால், தொலைத்தொடர்பு துறைக்கு 36 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொலைத் தொடர்பு, தபால்துறை புனரமைப்பு பணிகளுக்காக பதினெட்டரைக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பதினேழரைக்கோடி ரூபாவும், தபால்துறை கட்டிட புனரமைப்பிற்காகவும் இந் நிதி செலவிடப்படவுள்ளது

வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மத்திய புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு இந் நிதியை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

சர்வதேச நிதியம் வழங்கியுள்ள இந்நிதியைப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு திணைக்களத்தினூடாக பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. (து)

அவசரகால சட்டத்தில்

## அமுலிலிருந்த 6 விதிகள் அரசாங்கத்தினல் நீக்கம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அமுலில் இருந்த 6 விதிகள் நேற்று நள்ளிரவிலிருந்து அரசாங்கத்தினல் நீக்கப்பட்டுள்ளது.

செய்திகளை வழங்குவதில் கட்டுப்பாடு, சர்வகட்சி மாநாட்டு நடவடிக்கைகளை வெளியிடுதலில் தடை, மரண விசாரணையின்றிச் சடலங்களை தகனஞ்செய்தல், அரசியல் கட்சிகள், ஸ்தாபனங்கள் என்பனவற்றின் மீதான தடைகள் போன்றவற்றை யே நேற்று நள்ளிரவிலிருந்து ரத்

(8ம் பக்கம் பார்க்க)

## படிவம் நிரப்பவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வெளிமாகாணங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு மாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் உடனடியாக யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர். அங்குள்ள படிவம் ஒன்றை நிரப்பிக்கொடுத்தால் தான் அவர்களுக்குரிய பாடசாலைகள் பின்னர் அறிவிக்கப்படும். (எஸ்.)

''இலங்கை படையினரால்

## 87ல் கைதான தமிழ் இளைஞர்கள் உயிருடன் இருக்கின்றார்கள்''

### விடுதலையான இளைஞர் தகவல், பெற்றோர் கொழும்பு பயணம்

(வடமராட்சி)

மூன்று வருடங்களுக்குமுன்னர் கடலில் வைத்து இலங்கைப்படையினரால் கைதான தமிழ் இளைஞர்கள் கொழும்பிற்கு அருகில் உள்ள பகுதியில் இன்னும் உயிருடன் இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்துபெற்றோர், பிள்ளைகள் மீட்டுவர கொழும்பு சென்றுள்ளார்கள்.

இளைஞர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற தகவலை அண்மையில் அங்கிருந்து விடுதலையான திருமலையைச் சேர்ந்த எஸ். குணரத்தினம் (வயது 24) என்ற இளைஞர் தெரிவித்தார்.

1987ம் ஆண்டு பாக்குநீரிணை கடலூடாக அகதிகளாகவும், மீன்பிடிப்பதற்காகவும்சென்ற பல அப்பாவி தமிழ் இளைஞர்களை இலங்கைப் படையினர் கைதுசெய்தனர். இவர்களில் பலர் இறந்துவிட்டதாகவும், சிலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அப்போது

(8ம் பக்கம் பார்க்க)

## ''வறிய மக்கள் எம்மையும் ஆயுதங்களையும் பாதுகாத்தனர்''

(மட்டுவில்) - பாப்பா

''இந்தியப் படை சுற்றிவளைத்தபோது வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட மக்களே தமது குடிசையில் தம் இடர்களைப் பொருட்படுத்தாது எம்மையும் எமது ஆயுதங்களையும் காப்பாற்றிட உதவினர். எமது கைகளில் உள்ள ஆயுதங்கள் வசதி படைத்தோரின் நிதியால் வாங்கப்பட்டவை ஆகவே தமிழ்மக்களின் சகல பிரிவினரினது ஆதரவுடன் நமது இயக்கம் வளர்ந்து வருகிறது''

(8ம் பக்கம் பார்க்க)

## ''புலிகளில் சேரும் இளைஞர்கள் சுதந்திர வீரர்களாக உருவாக்கப்படுவார்கள்''

(வடமராட்சி) — தீபன்

''புலிகள் இயக்கத்தில் சேரும் இளைஞர்களைப் பற்றிப் பெற்றோர்கள் அச்சமடையத் தேவையில்லை. அவர்கள் நாட்டுக்குச் சிறந்த தியாகிகளாகவும், சுதந்திர வீரர்களாகவும் உருவாக்கப்படுவார்கள்''.

வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது பெற்ரோர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் தீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது ...

(8ம் பக்கம் பார்க்க)

அமைதிப்படையினரால்

## வடக்கில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 700 பேருக்கு விடுதலை கிடைக்கும்

(கொழும்பு)

இந்திய அமைதிப்படையின் பாதுகாப்பில் காங்கேசன் துறையில் வைக்கப்பட்டிருக்கும் 700 பேர் இம்மாத இறுதிக்குள் விடுதலை செய்யப்படுவார்கள்.

வடபிராந்தியத்தில் இந்திய அமைதிப்படைக்குப் பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் ஆர். என். பல்லா இத் தகவலைத் தெரிவித்தார்.

கரவெட்டி, வல்வெட்டித்துறை. பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரமுகர்களைக்கொண்ட தூதுக்குழு ஒன்று அவரைச் சந்தித்த போதே சம்பந்தபபட்டவர்களின் விடுதலை தொடர்பான தகவலை அவர் வெளியிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1954க்குப் பின் பிறந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதில் தாமதம்!

(மானிப்பாய்)

யாழ் மாவட்டத்தில் 1954ம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களுக்கு தற்போது யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் திரு. எல். இராசையா தெரிவிக்கையில் 1954 ம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களுக்கு விநியோகிக்கப்படும் இருபக்க படிவங்கள் முடிவடைந்து சில வாரங்களாகியும் இவை கொழும்பிலிருந்து இன்னும் வந்து சேரவில்லை. இதனல் இவற்றை பெறுவதற்கு விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானவர்களுக்கு இவற்றை உடன் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 1954 ம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களுக்கான ஒரு பக்க படிவம், கல்யாண அத்தாட்சிப் பத்திரப் படிவம், இறப்பு அத்தாட்சிப் பத்திர படிவம் ஆகியன போதியளவு கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கத்திக்குத்து

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புச் சந்தையில் தரகுவேலை செய்துவந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிந்தது. நேற்று முன்தினம் காலையில் பண்டத்தரிப்புச் சந்தையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கத்திக்குத்தினல் படுகாயம் அடைந்த தரகர், யாழ் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இல. 18, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஐந்து பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு வெறும் காணியாகவும், வீட்டுடன் காணியாகவும் பிரித்தும் விற்பனை செய்யப்படும். விபரங்களுக்கு: க. மன்மதராசா, இல 68, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். (ஏ 3391)

### தேவை

இளம் ஆற்றல்மிக்க ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. தங்களின் கல்விச் சான்றிதழ்களுடன் வியாபாரத்துறையில் அனுபவமிக்கவர்கள் 18-02-90 ஞாயிற்றுக்கிழமை காலை நேரில் வருகை தரவும். தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 548)

## முன்னுரிமை பட்டியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டோரின முன்னுரிமைப் பட்டியல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான முறைப்பாடுகள் நாளை 17-ம் தேதிக்கு முன்னர் மாவட்ட கல்விப் பணிப்பாளருக்குஅனுப்பப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

### யாழ். மத்திய கல்லூரி

### புதிய கட்டடத் திறப்பு விழாவும் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும்

17-02-1990 சனிக்கிழமை

திறப்பு விழா: காலை 8-30 மணி
பரிசளிப்பு விழா: பிற்பகல் 2-30 மணி

பிரதம அதிதி -
செல்வி தி. பெரியதம்பி
[ யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் ]

சிறப்பு அதிதிகள்:
திரு. வி. தியாகராஜா
[ யாழ். கோட்டக் கல்வியதிகாரி ]
திரு. கே. இரத்தினம்
[ பொறியியலாளர், திட்ட முகாமைத்துவ அலுவலகம் ]
திரு. எம். ஏ. பிரான்சிஸ்
[ பொறியியலாளர், யாழ். கல்வித்திணைக்களம் ]

பெற்றேர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யாழ். மத்திய கல்லூரி,
16-02-1990. (சி 546)

### உடனடித் தேவை

திருநெல்வேலியில் உள்ள எவர்சில்வர் தொழிற்சாலைக்கு வேலைபழகுநர்கள், வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும்.

முகாமையாளர்,
63, இராஜவீதி, திருநெல்வேலி. (சி-523)

## இராசி பலன்

16-2-1990
வெள்ளிக்கிழமை

ஷஷ்டி காலை 8 ம. 35 வரை; சுவாதி மாலை 5 ம. 45 வரை. சித்தயோகம், இராகுகாலம் காலை 11 ம. 03 முதல் 12 ம. 31 வரை சுபதினமல்ல.

மேஷம்: நிர்வாகத்திறமை. பொருளாதார ஏற்றம், நண்பருதவி, சென்ற இடத்தில் சிறப்பு.

இடபம்: மனநிறைவு, சகோதர உதவி, புதிய திட்டம், பயணம், குடும்பமகிழ்ச்சி

மிதுனம்: தடுமாற்றம், பணச்செலவு, தொழில் நஷ்டம், மனவேதனை, வீண் தொல்லை.

கடகம்: ஏமாற்றப்படுதல், சுடும் யோசனை, சிறுபிணி, பணவரவு, நண்பர் விரோதம்.

சிங்கம்: தந்திரோபாயம், தொழில் சிறப்பு, விருந்தினர் வருகை, புதியஸ்தானம்.

கன்னி: பணமூலமான கவலை, மனச்சுமை, அலைச்சல் குடும்பப்பகை, ஞானிகள் சந்திப்பு.

துலாம்; கடும் கோபம். பயணங்களால் செலவு' தொழிலில் பாராட்டுமாமனர் உதவி.

விருச்சிகம்: பயனற்ற செயல், குடும்ப விவகாரம், நோய் வாட்டும், அநாவசிய தலையீடு.

தனுசு: மங்கள காரியம், குடும்ப சந்தோஷம், கடித தொடர்பு, தாய்வழி உதவி.

மகரம்: நீண்டநாள் பகை அகலும், பெண் நேசம், உல்லாச பயணம், விருந்துபசாரம்.

கும்பம்: முரட்டு சுபாவம், பகைவர் தொல்லை, தொழில் பிரச்சனை, குடும்ப அமைதியின்மை.

மீனம்: சிறுவிபத்து, அதிகாரிகள் சீற்றம், மனவேதனை, பணக்கஷ்டம், கடன்.

## NEW MASTER INSTITUTE

B. M. C. LANE — JAFFNA.
241, NAVALAR ROAD, — JAFFNA.

**90 A/L WEEKEND CLASS**

**★ PHYSICS ★**

ஒட்டமின்னியல்

ஆசிரியர்:
திரு. வர்ணம்

புதிய பிரிவு ஆரம்பமாகிறது
SAT. & SUN. — 3-30 P. M.

(சி 521)

## வேலைக்கு ஆட்கள் தேவை

(1) அனுபவம்வாய்ந்த சமையல்காரர்.
சம்பளம்: ரூபா 2000-00 மேல் வழங்கப்படும்.

(2) பாதுகாப்பு உத்தியோகஸ்தர் (Security Guards) 40—45 வயதுக்கிடைப்பட்டவராகவும், வாகனம் செலுத்தக்கூடிய தகுதியுடையவராகவும் இருக்க வேண்டும்.

(3) தோட்ட வேலையாட்கள் (Gardeners) குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(4) கோழிப்பண்ணையில் கடமையாற்றக்கூடிய கூலியாட்கள் குடும்பப்பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது.

**18-02-90 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9-00 மணி முதல்**
**11-00 மணிவரை நேரில் வரவும்**

எமது ஸ்தாபனம் பொதுமக்கள் சேவைக்காக காலை 9-00 மணி முதல் இரவு 10-00 மணிவரை திறந்திருக்கும்.

# OLD PARK
## CHINESE RESTAUARANT

207, OLD PARK ROAD,
Chundikuli, Jaffna.

(சி 539)

## Wanted

RECEPTIONIST

Wanted a lady receptionist for an establishment in Jaffna with a knowledge of Typing in English & Tamil. Conversant in English preferred.

Apply with Bio data before 23-2-90.

Advt. No. 538
C/o Eelanadu, P. O. Box 49. Jaffna.

(C 538)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்-1989/90

இப்பல்கலைக்கழகத்தில் 1989/90-ம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு;

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்
4. போட்டோ பிரதிகள் 7 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

**கட்டணங்கள்**

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, மருத்துவபீட மாணவர்களும் பதிவுக்கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம்:
   மருத்துவம் ரூபா 20/-
   விஞ்ஞானம் ரூபா 15/-

| பயிற்சி நெறி | நேரம் | பதிவு செய்யும் திகதி |
| --- | --- | --- |
| கலை | காலை 9-00 — 12-00 | 26-2-1990 |
| வர்த்தகம் / முகாமைத்துவம் | காலை 9-00—12-00 | 27-02-1990 |
| விஞ்ஞானம் / பௌதிகம் | காலை 9-00—12-00 | 28-02-1990 |
| விஞ்ஞானம் / உயிரியல் | மாலை 1-00—03-30 | 28-02-1990 |
| மருத்துவம் / விவசாயம் | காலை 9-00 12-00 | 01-03-1990 |

மேற்கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

பதிவாளர்

(சி 549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்சொற்களால் எப்பொழுதும் உலகத்தை மகிழ்வித்தல் வேண்டும். கடுஞ்சொற் கூறுவோன கொடையாளனுயினும் உயிர்களை வெறுக்கச் செய்பவனுவான்.

—சுக்கிரநீதி

## நமது நோக்கு

## கட்டட வசதிகள் கண்காணிக்கப்பட வேண்டும்!

சென்ற சில ஆண்டுகளாக எமது பகுதியில் நடந்த வன்செயல்களினுல் உயிருக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட சேதங்களை எவரும் இலகுவில் மறந்து விடமுடியாது.

குறிப்பாக, பல பாடசாலைக் கட்டடங்கள் ஷெல் தாக்குதல்களினுலும், குண்டுத் தாக்குதல்களினுலும் சேதப்படுத்தப்பட்டன.

கட்டடங்கள் மாத்திரமா? பெறுமதிமிக்க தளபாடங்களும், உபகரணங்களும், நூல் நிலையங்களும் சேதமடைந்தன. இதனுற் பல்லாயிரக் கணக்கான பாடசாலை மாணுக்கரின் கல்விக்குக் குந்தகம் விளைந்தது.

உளத்தாக்கத்தினுல் கல்வி கற்பதற்கேற்ற சூழ்நிலையை மாணுக்கர் இழந்தனர். வேண்டா வெறுப்பாகப் பாடசாலை சென்றுலும். குறைந்தளவு வசதிகள் தானும் இல்லாது மேலும் பாதிப்புற்றனர்.

புதிய சூழ்நிலை உருவாகும்போது. மாணுக்கர்கல்வியில் உரிய கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம். மிக மிக அவசியம்.

'சம்பந்தப்பட்டவர்கள்' கல்வி வளர்ச்சியிலே காட்டும் அக்கறைகண்டு பொது மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது திண்ணம்.

இந்த வேளையில், தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளின் கட்டட வசதிக்கான ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கிய நிதி கிடைத்துப் புனருத்தாரண வேலைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேம்.

குறிப்பாக, யாழ். மாவட்டத்திற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி ஒன்பது கோடியே எழுபது லட்ச ரூபாவை வழங்கியுள்ளது. நோருட் நிறுவனமும் முப்பது லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதைவிட. பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தும் நாற்பத்திரண்டு லட்ச ரூபா கட்டட வேலைகட்கென வழங்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தநிதிகளைக் கொண்டு பாடசாலைக் கட்டடங்கள் மிக அவசரப் பணியாகக் கட்டுப்பட்டு வருகின்றன. மாணுக்கரின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு கட்டட நிர்மாணப்பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படுவது வரவேற்கப்பட வேண்டியது.

சகலரும் பூரண ஒத்துழைப்பை நல்கி இப்பணியை ஊக்குவிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட பல பாடசாலைக் கட்டடங்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். மத்திய கல்லூரி வேலைகள் முடியும் தறுவாயில் இருப்பதாகவும் அறிகிறேம்; மகிழ்ச்சி.

இதேவேளை, அவசரப் பணியாக வேலைகள் நடக்கும்போது எந்தவொரு குறைபாடுகளும் நேரக் கூடாது. ஒதுக்கப்பட்ட நிதியின் ஒவ்வொரு சதமும் உரிய முறையிற் செலவு செய்யப்படவேண்டும்.

இதை மனதில்கொண்டு அத்திவாரம் முதல் கூரை வரை சகல மட்டங்களிலும் கண்காணிப்பு அவசியம்.

ஒதுக்கியதொகையை எப்படியாயினும் செலவழித்து முடித்துவிடவேண்டுமென்ற மனப்போக்கு இல்லாது உறுதியான கட்டடங்கள் மாணுக்கருக்குக் கிடைக்க வழிவகைகளை மேற்கொண்டுள்ளார்கள் என நம்புகிறேம்.

இந்த நம்பிக்கையை உறுதிசெய்ய தீவிர கண்காணிப்பும் அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேம்.

### இஸ்லாமிய சிந்தனை

## ஸக்காத் (தான தர்மம்)

இஸ்லாத்தின் ஐந்து பிரதான காரியங்களுள் ஸக்காத்தும் ஒன்றுகும். இது மூன்றுவது காரியம் இதைக் கொடுக்குமாறு அல்லாஹ் திருக் குர்ஆனில் அநேக இடங்களில் ''தொழுகையை நேயமாய்ச் செய்யுங்கள்; மேலும் ஸக்காத்தைக் கொடுங்கள்'' என்று தொழுகையை நிலைபாடாக்குமாறு கட்டளையிடுவதுடன். சேர்த்து ஸக்காத்தைக் கொடுங்கள் என ஆக்ஞாபிக்கிருன். மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் ''மேலும் தங்கத்தையும், வெள்ளியையும் பொக்கிஷமாக்கி, அல்லாஹ்வின் பாதையில் அவைகளைச் செலவு செய்யாமல் இருப்பவர்களுக்கு நோவினைக் கொடுக்கும்படியான வேதனை இருப்பதாக அவர்களுக்கு (நபியே) நீர் நற்செய்தி கூறுவீராக'' என்று கூறுகிருன்.

நபிகள்பிரான் (ஸல்) அவர்கள் ''ஸக்காத்துக் கொடுக்காதவனுக்கு சன்மார்க்கமில்லை. நோன்பும் இல்லை. ஹஜ்ஜும் இல்லை. சன்மார்க்கப் புனித யுத்தமும் இல்லை'' என்றும், உங்கள் முதல்களை ஸக்காத் (தான தர்மம்) கொடுப்பதன் மூலம் பாவத்தினின்றும் சுத்தப்படுத்துவீர்கள். அளவற்ற நன்மையும் அடைவீர்கள்.''

ஆயிஷா....

## சமயத்தை விளங்க வேண்டாமா?

1. விநாயகரை வணங்கும் போது தலையில் குட்டிக்கும் பிடுவதேன்?

அகத்திய முனிவரோடு திருவிளையாடல் புரிய விநாயகர் விரும்பினுர். பிராமணச் சிறுவனுக வடிவெடுத்துவந்து அவரோடு விளையாடிக் கொண்டிருந்தார். விளையாட்டின் போது அவரைக் குட்டுவதறகு அகத்தியர் கையை ஓங்கினுர்; விநாயகர் மறைந்து தமது உண்மை உருவைக் காட்டினுர். உடனே அகத்தியர் குட்டுவதற்கு எடுத்த கையை தம் தலையிலே குட்டிப் பிழை பொறுக்குமாறு வணங்கினு. விநாயகரை வணங்கி அருள் பெற இந்த வழக்கம் இன்று வரை தொடர்கிறது.

2. ஈழத்தில் சைவத்தின் தொன்மை பற்றி ஆராய்ந்து எழுதியவர்கள் யார்?

போத்துக்கேய, ஒல்லாந்த ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் இலங்கையில் தொன்மைக் காலத்தில் இருந்தே சைவசமயம் நிலவியதென எழுதியுள்ளார்கள். குவிறேஸ் ரென்ற் முதலியோரின் நூல்கள் வெளிநாடுகளிற் பெரும் வரவேற்புப் பெற்றன.

### வெள்ளி விருந்து

வல்பொல இராகுல, சேர். பொன். அருணுசலம், சேர். வில்லியம் ஜோன்ஸ், கலாநிதி போல் பீரிஸ் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

3. தெய்வங்களிற்கு அர்ச்சனைக்கு ஆகாதவை எவை?

விஷ்ணுவிற்கு அட்சதையால் அர்ச்சிக்கக் கூடாது துளசியாற் கணபதியையும அறுகம்புல்லினுல் துர்க்கையையும், வில்வத்தால் சூரியனையும், தும்பையால் இலட்சமியையும், பவள புஷ்பத்தால் சரஸ்வதியையும், மல்லிகையினுல் பைரவரையும், தாழம் பூவினுல் பரமசிவனையும் அர்ச்சிக்கக்கூடாது.

4. சூரிய வழிபாடு எமது நாட்டவர்க்கு மாத்திரம் உரியதா?

''யார் நம் அறிவைத் தூண்டுகின்றுரோ அச்சுடர்க் கடவுளின் ஒளியைத் தியானிப்போமாக'' என்று சூரிய வழிபாட்டைக் கூறுகிறது காயத்திரி மந்திரம்,

ஐரோப்பா, தென்அமெரிக்கா, சீனு ஆகிய நாடுகளிற் சிதைந்த சூரியன் கோவில்கள் காணப்படுகின்றன. ஆதன் என எகிப்தியரும், அப்பலோ எனக் கிரேக்கரும் ஆதித்தனை வழிபட்டனர். மெக்சிகோ நாட்டுப் பழங்குடிகளான மாயர்களும் காலைச் சூரியனுக்கு வணக்கம் செலுத்தினுர்கள்.

தொகுப்பு; சி. கலையரசி

யாழ். மாவட்டத்தில்

# இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கு 1,250 வீடுகள்!

## தேசிய வீடமைப்பு அதிகார சபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய யாழ். மாவட்ட அகதிகளுக்கும், வீடுகளை இழந்தவர்களுக்கும், வழங்குவதற்கென ஆயிரத்தி இருநூற்றியம்பது வீடுகளை தேசிய வீடமைபபு அபிவிருத்தி அதிகார சபை யாழ். மாவட்டத்தில் நிர்மாணித்துவருகின்றது,

இவ்வீடுகளை அமைப்பதறகு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் நிதியுதவி வழங்கியுள்ளதாக யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பொது முகாமையாளர் திரு. ஜோசெப் மரியான் தெரிவித்துள்ளார்.

இவ்வீடுகளில் ஐநூற்றி இருபத்தொன்று பூரணப்படுத்தப் பட்டுள்ளன. மிகுதியான ஐநூற்று அறுபத்தொன்று முடியும் தறுவாயிலுள்ளன, எண்பத்தேழு வீடுகள் ஆரம்ப நிலை நிலையிலுள்ளன. குறிக்கப பட்ட வீடுகளில் எழுநூறு வீடுகள் இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கு வழஙகப் படும். ஐநூற்றியம்பது வீடுகள் முற்றுக வீடுகளை இழந்தவர்களுக்கு வழங்கப்படும.

தொண்ணூற்றிநாலு வீடுகள் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நூற்றிமுப்பத்தைந்து தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இருநூற்றி எழுபத்தைந்து வீடுகள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், நூற்றி நாற்பது வீடுகள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இருபத்திரெண்டு வீடுகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நூற்றிரெண்டு வீடுகள் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், எழுபத்திநாலு வீடுகள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், இருபத்திநாலு வீடுகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், எழுபத்தொரு வீடுகள் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபா

(7ம் பக்கம் பார்க்க)

### அமைச்சரை சந்திப்பர்

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தேவைகள் சம்பந்தமாக இவ்வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, சுகாதார அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இம்மாதம் 19ஆம் திகதி வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக் குழுவினர் சுகாதார அபிவிருத்திச் சபைக் குழுவினர் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர். (61)

### மக்கள் நடமாட்டம் இரவில் அதிகரிப்பு

(காங்கேசன்துறை)

வலி-வடக்குப் பகுதியில் ஓரளவு சகஜ நிலை திரும்பியுள்ளதையடுத்து இரவிலும் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வலி. வடக்குப் பகுதியில் இருந்த இந்திய அமைதிப் படை முகாம்கள் பலவும் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன.

ஓரளவு சகஜ நிலை திரும்பியுள்ளதன காரணமாக மக்கள் அச்சமின்றி இரவிலும் நடமாட ஆரம்பித்துள்ளனர். முன்னர் மாலை 6 மணிக்கு முன்பதாகவே செய்து முடிக்கப்பட்ட ஆலய திருவிழாக்கள் தற்போது இரவு 9 மணி வரை நடைபெற ஆரம்பித்துள்ளது. (86)

### சந்நிதியில் சிவராத்திரி

(புலோலி)

தொண்டமாறு செல்வச் சந்நிதி முருகன் கோவிலில் இம்மாதம் 23ம் திகதி மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆறு ஜாம பூசைகளுடன் மாலை 6மணிக்கு விசேட உற்சவமும் நடை நடைபெறும். (61)

### சனி மாற்றம் பலாபலன்கள்

சனி பகவான் தனு இராசியில் இருந்து மகர ராசிக்கு அடுத்த மாதம் 20ஆம் திகதி பிரவேசிக்கின்றுர். மகர ராசியில் இரண்டரை வருடம் சஞ்சரிக்கும் சனி பகவான், 12 ராசிகளுக்கும் என்ன செய்யப்போகின்றுர்?

பலாபலன்களை 19-2-90 முதல் 'ஈழநாடு' தினசரியில் படியுங்கள். —ஆ-ர்

## பலதும் பத்தும்

வல்லாரை:

வல்லாரை ஒரு மூலிகை, அதனைச்சுத்தம் செய்தபின் பச்சையாகவே உண்ண வேண்டும். சூடாக்கினுல் அதன் சத்துக்கள் அழிந்து விடும்.

இது சளியைத் தடுக்க உதவும்; வெங்காயத்துடன் சேர்த்து உண்டால் பீனிசம் நீங்குமாம். மூக்கு, தொண்டை ஆகியவற்றுள் வீக்கம் ஏற்படுவதேன்? தற்காலத்தில் ENT விசேட நிபுணர் பரிசோதித்து ஆவன செய்வார்.

ஆனுல், ஆயுர்வேத விளக்கத்தின்படி பித்தம் போன்ற சில திரவ அளவுகளில், மாற்றம் ஏற்படும்போது சில வகை வீக்கங்கள் ஏற்படலாம்; சளியும் காரணமாகலாம். இதற்கெல்லாம் வல்லாரை நல்ல நிவாரணமாகலாம்.

செங்கமாரி வந்தவர்களுக்குக்கூட வல்லாரை அவித்த நீர் உடலுக்கு நன்று. இரத்த அழுத்தத்தைத் தடுக்கவும், சிறு நீரகத்தைச் சுத்தம் செய்யவும் இது பெரிதும் உதவும்.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன் ஆக்கப்பட்டது சிங்கள ஆயுர்வேத நூல் ''யோக ரத்தின சாரயா''. புத்ததாசா என்ற சிங்கள மன்னன் சிறந்த வைத்தியராக விளங்கினுன். இவன் கி. பி. நான்காம் நூற்றுண்டைச் சேர்ந்தவன். இவன் எழுதிய வைத்திய நூல் ''சாரத சங்கரா''. இந்த நூல்களிலிருந்தே வல்லாரை பற்றிய மேற்படி செய்திகளைத் தொகுத்துள்ளார்கள்.

சிறிய வல்லாரைப் பிடி இரண்டு ரூபாவிற்கு மேல் விற்பனையாகின்றது இந்தச் சிறந்த மூலிகையைப் பெருமளவில் உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும்!

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் திணைக்களம்

## யாழ்ப்பாணம்

### ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் (யூ. என். எச். சி. ஆர்) கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் மாணவர்களை அனுமதித்தல்

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பாடசாலையை விட்டு விலகியோருக்காகக் கற்பிக்கப்படும் தொழிற்தினபிவிருத்திப் பாடநெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப் பயிற்சிகளைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு 90. 02. 28 ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'முறைசாராக் கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடநெறிக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். எனினும் ஏதாவதொரு பயிற்சி மட்டும்கற்க அனுமதிக்கப்படுவர்.

வசேடமாக அசம்பாவிதங்களினுல் பாதிக்கப்பட்டு இந்தியா சென்று மீண்டோரும் – இடம் பெயர்ந்தோரும் – ஜனசவிய திட்டத்தின் கீழ் உதவி பெறுவோரும் – ஏனையோரும் ஆண், பெண் வேறுபாடின்றி அனுமதிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலம் 14. 3. 90 தொடக்கம் 30. 12. 90 வரையாகும். பயிற்சி முடிவில் திணைக்களத்தில் நடாத்தப்படும் அறிமுறை செயல்முறைப் பரீட்சைகளில் தோற்றிச் சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

| | பயிற்சி நிலையம் | பயிற்சியளிக்கவுள்ள பாடநெறி |
|---|---|---|
| 1. | கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி | வீட்டு மின் இணைப்பு. மின் ஒட்டு வேலை, வானொலி திருத்துதல், ரீ. வி. திருத்துதல். |
| 2. | யா/கனகரத்தினம் ம. ம. வித். | மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து, தமிழ தட்டெழுத்து, ஹொட்டல் றேட்ஸ். |
| 3. | யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயம் | உடையமைத்தல், ஹொட்டல் றேட்ஸ் |
| 4. | யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம் | மேசன் தொழில். |
| 5. | யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி | பனையோலை பொருள் உற்பத்தி, தமிழ் தட்டெழுத்து. |
| 6. | யா/தேவரயாளி இந்துக்கல்லூரி | மரத்தளபாட உற்பத்தி, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து |
| 7. | யா/மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி | உடையமைதத்ல், ஆங்கில தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து. |
| 8. | யா/வைத்திஸ்வரா வித்தி. | மோட்டார் றீ வைன்டிங், மின் உபகரணங்கள்-உற்பத்தியும், பழுது பார்த்தலும், பத்திரிகைச் செய்தியாளர். |
| 9. | யா/ நாவலர் ம. வித்தி. | மரச்சிற்ப வேலையும், கைப்பணிப் பொருள்உற்பத்தியும், கட்புல சாதனங்கள் ஆக்கல், பட்டுத்திரை அச்சிடல். |
| 10. | யா/இந்துக் கல்லூரி. | பட வரைஞர்பயிற்சி, வாகன மின் இணைப்பு, (T. V.) ரி. வி. திருத்தல், இலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல். |
| 11. | யா/வேம்படி மகளிர் கல்லூரி | ஹொட்டல் றேட்ஸ், சமையற்கலை, ஆங்கில தட்டெழுத்து. |
| 12. | யா/மத்திய கல்லூரி | குளிர் சாதனப்பெட்டி, காற்றுப் பதனிடு கருவி திருத்ததுல், வானொலி திருத்துதல், |
| 13. | யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | விவசாய உபகரணங்கள் பழுதுபார்த்தல், மோட்டார் சைக்கிள் திருத்துதல். |
| 14. | யா/இணுவில் சைவப்பிரகாச ம. வித்தி. | உடையமைத்தல். |
| 15. | யா/இணுவில் அ. மி. த. க. பா. | உடையமைத்தல். |
| 16. | யா/இணுவில் சைவ மகாஜன வித்தி. | வீட்டு மின் இணைப்பு. |
| 17. | யா/இராமநாதன் கல்லூரி | ஹோட்டல் றேட்ஸ், விவசாய விஞ்ஞானம், |
| 18. | யா/மையிலணி ம. வித். | மோட்டார் பொறித்தொழில். |
| 19. | யா/மல்லாகம் ம. வித். | ஆங்கில தட்டெழுத்து, ஹொட்டல் றேட்ஸ், உடையமைத்தல். |
| 20. | யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி. | பட வரைஞர் பயிற்சி, ஆங்கில தட்டெழுத்து, மோட்டார் றீ வைன்டிங். |
| 21. | யா/வட்டு இந்துக் கல்லூரி | உடையமைத்தல். |
| 22. | யா/முத்துத்தம்பி ம. வித். | தோற்பொருள் உற்பத்தி |
| 23. | யா/விக்ரோறியாக் கல்லூரி | உலோகப் பொருள் உற்பத்தி, ஆங்கில தட்டெழுத்து. |
| 24. | யா/சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித். | வீட்டு மின் இணைப்பு, மின் ஒட்டுவேலை, உடையமைத்தல், ஆங்கில தட்டெழுத்து. |
| 25. | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | உடையமைத்தல், வாகனங்களுக்கான மின் இணைப்பு, ஆங்கில தட்டெழுத்து. |
| 26. | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி. | வீட்டு மின் இணைப்பு |
| 27. | யா/நல்லூர் சி. சி. ரி. எம். எஸ். | புத்தகம் கட்டுதலும், பேப்பர் பொருள் உற்பத்தியும். |
| 28. | யா/பாசையூர் புனித அந். கல்லூரி | மோட்டார் படகு திருத்துதல், தும்பு தொழில். |
| 29. | யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி. | உணவு பதனிடல். |

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்

1. கற்க விரும்பும் பாடநெறி:..............................
2. கற்க விரும்பும் பாடசாலை:..............................
3. முழுப் பெயர்:...................... பிறந்த திகதி......................
4. நிரந்தர முகவரி:...................... வயது:......................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம்.............. பால்:..............
6. இறுதியாகக் கற்று விலகிய பாடசாலையும் விலகிய திகதியும்:.........
7. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோகபூர்வமாக இலங்கை திரும்பியிருப்பின் அடையாள அட்டையின் இலக்கமும் திகதியும்:..............................
8. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோகபூர்வமற்ற முறையில் திரும்பியிருப்பின் திரும்பிய திகதி:......................
9. ஜனசக்தித் திட்டக்குடும்பத்தில் நீர் அங்கத்தவரா;......................
10. உள்ளூரில் இடம் பெயர்ந்தவரா:......................
11. தற்பொழுது ஏதாவது தொழில் புரிகிறீரா:..............
12. எத்துறையில்:...................... எங்கு:..............
13. வேறு தொழில்நுட்பத் தகைமைகள் பெற்றிருப்பின் குறிப்பிடுக:......................

.............................. ..............................

பெற்றோர்/பாதுகாவலர் ஒப்பம் — விண்ணப்பதாரியின் ஒப்பம்

திகதி........................

## கல்வித் தகைமைகள்

1. ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டச்சும்
   க. பொ. த. சாதாரணதரம் சித்தி (ஆங்கிலப் பாடத்தில் சீ தரத்தில் உட்பட)
2. படவரைஞர் ஆங்கில மொழிமூலம்
   கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் சீ தரமுட்பட க. பொ. த. சாதாரண சித்தி.
3. ஹோட்டல் ரேட்ஸ் ஆங்கிலம் / தமிழ் மொழிமூலம்:-
   ஆண்டு 10 சித்தி.
4. வானொலி திருத்துதல், எலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல்
   கணிதம், விஞ்ஞானம் உட்பட க. பொ. த. சாதாரணதரம் சித்தி.
5. தமிழ் தட்டச்சு
   தமிழ் சீ தரமுட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி.
6. ஏனைய பாட நெறிகள்:-
   தரம் 8 சித்தி.
7. தொலைக்காட்சி திருத்துதல்
   ஏற்கனவே வானொலி திருத்துதல் நெறியைக் கற்றவர்களுக்கு மட்டும் கணிதம், விஞ்ஞானம் சீ தரம் உட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி.

**செல்வி தி. பெரியதம்பி**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

# "கைதான புலிகளை கொழு

# தளபதி விரும்பியபோது ...

(நேற்றைய தொடர்ச்சி)

கே: விடுதலைப் புலிகள் ஏன் வாக்குறுதியை மீறினர்?

ப: ஒப்பந்தத்திற்கு பின் தமது உறுப்பினர்கள் இலங்கைப்படையினரால் கைது செய்யப்பட்டு கொழும்பிற்கு விசாரணைக்காக கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டதாகவும் இதனுல் 'சயனைட்' அருந்தி அவர்களில் பலர் மரணமடைந்ததாகவும் தெரிவித்தனர்.

கே: அவர்களை கொழும்பிற்கு கொண்டு வர யார் விரும்பியது?

ப: பாதுகாப்பு சேவையினர்.

கே: அப்போது திரு ஜே. என். டிக்ஷிற் என்ன கூறினுர்?

ப: எனக்கு எப்படி தெரியும். அவர் புலிகளுக்கு கூறினுர். இலங்கை பாதுகாப்பு சேவையினர் கைதான புலிகளை கட்டாயம்கொழும்பிற்கு கொண்டுவர வேண்டுமென தளபதி கூறினுர். அதற்கு நானும்உடன்பட்டேன். பாதுகாப்புபடையினரின் நடவடிக்கையை ஆதரித்தேன்.

கே: இது உங்களை ஆத்திரமூட்டச் செய்யவில்லையா?

ப; அவர்கள் சட்டத்தை புறக்கணித்தனர். இந்த நடவடிக்கை எடுக்காவிடில் மேலும் சட்டதிட்டங்களை புறக்கணித்து தமது வாக்குறுதிகளை மீறியிருப்பர்.

இந்திய அமைதிகா... படை யுத்தப்படையாக... யது. எமசு நாட்டி... சுமார் 150 இந்திய ப... னர் மரணமடைந்துள்... எமதுயுத்தத்தை அ... மேற்கொண்டனர். ராஜீவ் காந்தி எமது ...

**(இந்திய - இலங்கை உடன்பாடு தொட... பாகவும், இந்தியப் படைகள் இலங்கைக்கு... ஏன் வந்தன என்றும், மற்றும் இதனை... இலங்கையில் ஏற்பட்ட பல நிகழ்வுகள் குறி... தும், அதற்கு முன் வடக்கு-கிழக்கில் இல... கைப் படையினரின் நடவடிக்கைகள் குறி... தும் முன்னுள் ஜனுதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன கொழும்பு ஆங்கிலப் பத்திரி... ஒன்றிற்கு அளித்த பேட்டியின் மிகுதிப்பகுதி இங்கு பிரசுரமாகிறது.)**

கே; அதன் பின் அசம்பாவிதங்கள் நடந்தன?

ப: ஆம். திரு. காந்தி புலிகளிடமிருந்து கட்டாயமாக ஆயுதங்கள் களையப்படுமென எனக்கு எழுத்துமூலம் உறுதியளித்திருந்தார். எனவே ஜே. வி. பி.யுடன் ...

...லிருந்து தீவிரவா... எதிர்த்தார். இது ... பெரும் வெற்றி. இ... நாம் அவர்களிற்கு ... சொல்லவேண்டும்.

கே: அதனுல் தெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கொழும்புக்கு கொண்டுவர'

# ...து நானும் ஆதரித்தேன்"

## - ஜே. ஆர்.

அமைதிகாக்கும்
...யுத்தப்படையாக மாறி
...நாட்டிற்காக
150 இந்திய படையி
...ரணமடைந்துள்ளனர்.
...யுத்தத்தை அவர்கள்
...கொண்டனர். திரு.
... காந்தி எமது தரப்பி

...ன்பாடு தொடர்
...ள் இலங்கைக்கு
...ற்றும் இதனுல்
...கழ்வுகள் குறித்
...-கிழக்கில் இலங்
...க்கைகள் குறித்
...திரு. ஜே. ஆர்.
...கிலப் பத்திரிகை
...ன் மிகுதிப்பகுதி.

... தீவிரவாதத்தை
...தார். இது எமக்கு
... வெற்றி. இதனுல்
... அவர்களிற்கு நன்றி
...வேண்டும்.
... அதனுல் தெற்கில்
...பி. பியுடன் போரிட

இலங்கை படையை அனுப்ப முடிந்தது?

ப: ஆம் 1971ல் திருமதி பண்டாரநாயக்கா செய்தது போல் அவர்களுடன் சண்டையிட நான் ஒருபோதும் உதவி கேட்கவில்லை. அப்போது அவர் வடக்கு-கிழக்கில் யுத்தம் எதனையும் எதிர் நோக்கவில்லை. அவர் எல்லோரிடமும் உதவி கேட்டார். ஆனுல் ஜே. வி. பியுடன் சண்டையிட என்னுல் முடியும். வடக்கு கிழக்கு தீவிரவாதிகளுக்கு இந்தியா உதவி செய்ததுடன் பண உதவியும் இராணுவப் பயிற்சியுமளித்தது.

நான் உதவி கேட்டபோது யாரும் முன்வரவில்லை. அதற்குஇந்தியாதடை போட்டது.

கே: திருமதி இந்திரா காந்தி ஏன் இலங்கை தொடர்பாக திரு. எம். ஜி. ஆர். கொண்டிருந்த எண்ணத்தில் அக்கறை கொண்டார்?

ப; கருணுநிதியை அவர் எதிர்த்தனுல் இதை ஆதரித்தார். தமிழகஅரசியல் வாதிகள் தமக்குசார்பாகஒவ்வொரு தமிழ்குழுக்களை ஆதரித்தனர்.

கே: இப்போதைய நிலை?

ப: எம். ஜி. ஆர் இறந்து விட்டார். கருணுநிதி ஆட்சியிலுள்ளார்.

கே: நீங்கள் உதவி கேட்ட போது ஏன் மேற்கத்திய நாடுகள் உதவ முன்வரவில்லை?

ப: அவர்கள் இந்தியாவை ஆத்திர மூட்ட விரும்பவில்லை, அதற்கு மேற்கத்திய நாடுகள்; இந்தியா என்ன சொல்லும் என்றுவினவினர். அதற்குநான் இந்தியா தீவிரவாதிகளுக்கு

திருமதி காந்தியையும் சஞ்சய் காந்தியையும் கூறி இலங்கையில் திருமதி ஸ்ரீமாவோவையும் அனுராவையும் கூறியிருந்தீர்களே?

ப: நாம் 77 தேர்தலின் போது அவ்வாறு கூறவில்லை. எனினும் இதனை திருமதி இந்திரா பெரிதாக எடுத்து மனஸ்தாபப்படுவாரென நான் நினைக்கவில்லை.

கே: அப்போது திருமதி காந்தி கோப்படக் காரணம் என்ன?

ப: 'காமன்வெல்த்' மாநாட்டின்போது புதுடில்லியில் நடைபெற்ற இரவு விருந்தொன்றின்போது உரையாற்றுகையில் "இந்தியா அணிசேரா நாடுபோல் பாசாங்கு செய்கிறது. சோவியத் சார்பாக நடந்து கொள்கிறது. ஆப்கானில் சோவியத் துருப்புகள் நிலைகொண்டிருப்பதையும் ஆதரிக்கிறது என்றேன். திரு கொர்ப்பச்சேவ் இதனை உடனடியாக மறுத்தார். அப்படியானுல் இந்தியா மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும்கூறியசார்பின்மையை ஆதரிக்க வேண்டும் என்றேன். சரியானதை கூறும்போது இந்தியா பயப்படுகிறது என்றேன்.

இதற்குஆதாரமாக ரவீந்திர நாத் தாகூரின் கவிதை ஒன்றினையும் கூறினேன்; இதுவே திருமதி இந்திரா காந்திக்குக் கோபமூட்டியிருக்கலாம.

கே: நீங்கள் எண்பது முற்பகுதியில நட்புறவு உடன்

## நட்புறவு உடன்படிக்கை நகல்

# இந்திய அதிகாரிகளினுல் தடைப்பட்டுவிட்டது

உதவிவருவதாகக் கூறினேன் அதற்கு அவர்கள் சிறிதளவும் அசையவில்லை. அதனுல் அமெரிக்காவிடமிருந்து நாங்கள் வாங்கிய 'பெல்' ரக ஹெலிக்காப்டருக்கு சிறிதளவு மாற்று உதிரிப்பாகங்கள் தருமாறு கேட்டோம் ஆனுல் அதற்கு இந்தியாவின் அனுமதி தேவையென அமெரிக்கா கூறியது. இஸ்ரேல் மட்டும் எமக்கு உதவ முன்வந்தது. ஆனுல் நான் இதை விரும்பவில்லை. எழுபதுகளில் இஸ்ரேலுடனுன உறவை துண்டித்துவிட்டோம். எமது நாட்டில் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தூதரகம் இருக்கிறது ஆகவே இஸ்ரேல் எதற்காக?

கே; இந்தியாவும் இதை விரும்பவில்லையா?

ப: ஒரு முறை நான் புதுடில்லியில் திருமதி இந்திரா காந்தியுடன் ஆலோசிக்கும் போது அவர் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை மூடவேண்டுமென என்னை கேட்குமாறு திருமதி பண்டாரநாயக்கா கூறியதாகச் சொன்னுர். அதற்கு நான் திருமதி இந்திரா காந்தியிடம் "நீங்கள் பம்பாயில் உள்ள இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை மூடினுல் நானும் அதை செய்வேன்" என்று கூறினேன். மேலும் இதை என்னிடம் கேட்குமாறு கூறிய திருமதி பண்டாரநாயக்கா "ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புகளை வாபஸ் செய்யுமாறு ஏன் உங்களிடம் கேட்கவில்லை" என்று கேட்டேன்.

கே: திருமதி இந்திரா காந்தி மத்தியில் 'சிலேடைகள்'வீசுவதில் நீங்கள் பிரபல்யம் பெற்றுள்ளீர்கள். உதாரணமாக 1977ல் பாக்கு நீரிணையில் பசுவும் கன்றுமே ஆளுகின்றன என சிலேடையாக

.படிக்கை தொடர்பாக நகல் எதையும் இந்தியாவிற்கு அனுப்பியிருந்தீர்களா?

ப: ஆம். 1984-ல் அனுப்பினேன். ஆனுல் அது இந்திய அதிகாரிகளினுல் தடைபட்டுவிட்டது. அது இந்திய-சோவியத் நட்பு உடன்பபடு போன்றது. அதைத் தான் கவனிப்பதாகவும் திருமதி காந்தி கூறினுர்.

கே. இலங்கை மீது இந்தியாவிற்கு எந்தக் கருத்து கோபத்தினை ஏறபடுத்தியது?

ப: நான்கு கருத்துக்கள் உள்ளன. திருகோணமலையில் இருந்த அமெரிக்க சிங்கப்பூர் எண்ணெய் கம்பனி. பாகிஸ்தான் நிறுவனம், 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம், இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவும், பாகிஸ்தானில் இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பதும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் திருமலை எண்ணெய் நிலையப் பகுதியையே விரும்பின. வேறு எதனையுமல்ல. இந்தியாவிற்கும் இதில் சந்தர்ப்பமளிக்கவே விரும்பினேன். இது தொடர்பாகப் பேச்சு நடாத்த பெற்ரேலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஜி. வி. பி. சமரசிங்கவையும் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தேன். ஆனுல் இது நடைபெறவில்லை. இப்போது ஒப்பந்தம் மூலம் அது சாத்தியம். அவர்கள் இதைச் செய்யலாம்.

கே: 'வொய்ஸ் ஒப் அமெரிக்காவின்' நிலை என்ன?

ப: அது என்னுல் முடியாது நான் ஆட்சிக்கு வரமுன்னரே அது அமைக்கப்பட்டது. அதை நான் திருமதி காந்திக்கு கூறினேன். அதை நீங்கள் கண்காணிப்பதற்கு நான் மறுப்புக் கூறமாட்டேன் என்றும் கூறினேன்

(தொடரும்)

...வம்

...ற்கான

...........

...........

...ல்:...........

...கேதியும்:.........

...யின் ஒப்பம்

...ல்

...ா. த.

...க்கல்
...தரம் சித்தி.

...தி.

...ளுக்கு மட்டும்
...சாதாரண

...தம்பி
...பாளர்

எ-547

## வெள்ளி விழா காணும் இசைக் கல்லூரி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பாலர் ஞானேதய இசைக் கல்லூரியின் வெள்ளி விழா மூன்று நாள் நிகழ்ச்சிகள் அண்மையில் மேற்படி கல்லூரியில் விமரிசையாக நடைபெற்றன. இவ்விழாவில் பழம் பெரும் இசை வல்லுநர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களது சேவையினையும் பாராட்டிப் பேசினர். சிறப்புரைகளை நம. சிவப்பிரகாசம், ம சிதம்பரப்பிள்ளை ந. செல்வநாயகம் வை வேணியான். வெற்றிவேல் சக்திவேல் ஆகியோர் வழங்கினர். முதல்நாள் நிகழ்ச்கிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி என். சுப்பிரமணிய ஐயரும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு திருமதி ச. கந்தையாவும், மூன்ரும் நாள் நிகழ்ச்சிக்கு சைவப்புரவலர் ஆத்மஜோதி நா. முத்தையாவும் தலைமை தாங்கிச் சிறப்பித்தனர். நன்றியுரையை திருமதி கமலா தேவி பொன்னம்பலம் வழங்கியதுடன் மூன்று நாளும் இசை நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (12)

## 'கேபிள்கள்' திருட்டினுல் தொலைபேசிசேவை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் தொலைபேசிக் கம்பிகளைக் களவாடுவதால், வழமையான தொலைபேசிச் சேவைகள் கூடத் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்டத் தொலைத் தொடர்புத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் கே. யின்றி வாழ்வதற்குக் காரணம் இறையுணர்வு மக்கள் மத்தி சிவப்பிரகாசம் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசிக் கம்பிகளைத் திருடி, பழைய இரும்பு வாங்கும் கடைகளுக்கு விற்பனை செய்யும்மோசடிக்காரர்களைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் திணைக்களம் வழமையான தொலைபேசி வசதியைப் பொதுமக்களுக்கு வழங்கமுடியாமற்போகும் வாய்ப்பு உள்ளதெனத் தெரிவித்தார்.

எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில், 96 இணைப்புகளைக் கொண்ட நேரடித் தொலைபேசி வசதியைத் திணைக்களம் ஏற்படுத்தியுள்ளது.

உரும்பராய் தபால்நிலையத்திற்கு நேரடி இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடிவுசெய்திருந்தும் கம்பிகள் திருடப்பட்டுள்ளதால் அது தாமதமாகியுள்ளது. ஒருசில தினங்களுக்கு முன்னர்கூட யாழ். செயலகத்திற்கு அண்மையில் கம்பிகளைச் சமூகவிரோதிகள் வெட்டிச் சென்றுள்ளனர். எனவே இதனைப் பொதுமக்கள் தடுத்து நிறுத்த முன்வர வேண்டுமெனக் கூறினுர். (12)

## வெள்ளி விழா போட்டிகள்

(புலோலி)

அல்வாய் தெற்கு பாரதி தாசன் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது.

மாணவர்களிடையே நடத்தப்படும் இப்போட்டி கனிஷ்ட பிரிவு, கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு, மேல்பிரிவு ஆகிய பிரிவுகளாக நடத்தப்படும.

கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, சிறுகதையாக்கம், கவிதையாக்கம் என்பன இப்போட்டிகளில் இடம் பெறும்.

போட்டிகளில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் அல்வாய் தெற்கு பாரதி தாசன்சனசமூகநிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (61)

## நிர்வாகிகள்

(அச்சுவேலி)

பாடசாலை மாணவர்களின் கணித பாட அறிவை மேம்படுத்துவதற்கு கோப்பாயில் கணிதக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

கணிதக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கோப்பாய் கொத்தனி அதிபர் பூ. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவின் போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பூ.க. இராசரத்தினம் கோப்பாய் கொத்தணி அதிபர்], செயலாளர்: திருமதி அ. வேதநாயகம் [சேவைக் கால ஆலோசகர் கோப்பாய்] பொருளாளர்: வி. சண்முகலிங்கம் [புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி.]

## காங்கேசன்துறை

# குடிநீர் விநியோக திட்டம் பூர்த்தி

(காங்கேசன்துறை)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின சிறுவர் நிதியத்தின் உதவியுடன் காங்கேசன்துறை உப-அலுவலக எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட பாரிய குடிநீர் விநியோகத்திட்டம் பூர்த்தியாகியுள்ளது.

காங்கேசன்துறை மற்றும் அதையடுத்துள்ள கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதில பெரிதும் கஷ்டம் அனுபவித்து வந்தனர். குடிநீர் பவுசர்கள் மூலம் முன்னர் குடிநீர் வழங்கப்பட்ட போதும் பின்னர் சகஜநிலை சீர்குலைந்ததால் கடந்த பல வருடங்களாக அதுவும்தடைப்பட்டிருந்தது.

மேறபடி பகுதி மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் நிதியம் நிதியுதவி அளித்ததையடுத்து நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அதிகார சபை வேலைகளை ஆரம்பித்தபோதும் வன்செயல் சூழ்நிலைகள் காரணமாக திட்டம் பூர்த்தியடையாமல் இருந்தது

தற்போது இத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் 30 அடி ஆழமான இருகிணறுகள் வெட்டப்பட்டு அவற்றிலிருந்து தையிட்டி ஆவளைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் கலன் நீரைக் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கிக்கு நீர் செலுத்தப்பட்டு அங்கிருந்து குடிநீர் விநியோகம் இடம் பெறுகிறது.

காங்கேசன்துறை- பருத்தித்துறைவீதி, காங்கேசன்துறை-கீரிமலை வீதி, காங்கேசன்துறை பிரதான வீதி ஆகிய மூன்று வீதிகளிலும் 27 குடிநீர் குழாய்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட நேரங்களில் குடிநீர் விநியோகம் இடம்பெறுமெனவும் வலி-வடக்கு பிரதேச சபை தொழில் நுட்ப அத்தியட்சகர் திரு சு. நித்தியானந்தன் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் காட்டடைப்பு வீதி, 1ம். 2ம், 3ம் குறுக்கு வீதிகள் குரு வீதி, கல்லூரி வீதி ஆகியவற்றுக்கும் நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (86)

## யாழ் மாநகரசபை

# ஆணையாளர் முயற்சியால் மைதானம்சீரமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பாழடைந்த நிலையில் இருந்த யாழ். மத்திய கல்லூரி மைதானம் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இம் மைதானத்தில் நூற்றுக்கணக்கான பெரிய வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டதினுலும், மழைகாலங்களில் வாகனங்களை மைதானத்தை சுற்றிச் செலுத்தியதாலும், மைதானம் பாரிய குன்றும் குழியுமாக காட்சியளித்தது.

இதனுல் கல்லூரியின் விளையாட்டுப்போட்டிகளை உரிய காலங்களில் நடாத்த முடியாது இருந்தது.

கல்லூரி அதிபரும், பழைய மாணவர்களும் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு.பாலசிங்கத்திடம் மைதானத்தை சீரமைக்குமாறு கோரியிருந்தனர்.

மாநகர "புல்டோஸர்" மூலம் மைதானத்தம் சீர் செய்து சமப்படுத்தப்பட்டது.

(7ம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்தில்

# நெடுங்காலம் வாழ்ந்து வரும் முஸ்லிம்களை வெளியேற்ற முயற்சி

(வவுனியா)

அனுராதபுர புனிதப்பிரதேசத்தில் அமைந்துள்ள வெஸ்ஸகிரியா என்ற முஸ்லிம் கிராமத்திலுள்ள முஸ்லிம்கள் வெளியேற்றப்படவுள்ளனர்.

இத்தகவலை அனுராதபுர மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் திட்ட, திட்ட அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா வெளியிட்டார்.

அவர் மேலும்கூறியதாவது: இக் கிராமம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பௌத்த சின்னங்களைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் முஸ்லிம்கள் பலகாலமாக இங்கு வசித்துவருவதனுல் அவர்களை வெளியேற்றுவது அதிகாரிகளுக்கு சிரமமான காரியமாக இருந்தபோதும் அதற்கேற்ப ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஷ்மீர் பகுதியில்
# பயங்கரவாதம் ஒடுக்கப்படும்வரை
# சமாதானப் பேச்சுக்கு இடமில்லை
## இந்திய உள்துறை அமைச்சர் அறிவிப்பு

(புதுடில்லி)

**காஷ்மீரில் பயங்கரவாதநடவடிக்கைகள் ஒடுக்கப்படும் வரை சீர்குலைவு சக்திகளுடன் சமாதபனப்பேச்சுகளுக்கு இடமில்லை. அங்கு சமாதானம் நிலவ தேவையான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இந்திய உள்துறை அமைச்சர் ஜனுப் முக்தி முகமத் செய்யத் அறிவித்துள்ளார்.**

ஜம்மு காஷ்மீர் நிலைமைகளை நேரில் அவதானிக்கச் சென்ற உள்துறை அமைச்சர் அங்கு பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் கூறுகையில்: நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்கமுடியாது. ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதம் முற்றாக ஒடுக்கப்பட்ட பின்னரே அரசியல் நடவடிக்கைகளை மத்தியஅரசு தொடங்கும் என்றார்.

இதன்பின்னர் அங்கு நடைபெற்ற மாநாட்டில் ஜம்மு காஷ்மீரின் தற்போதையநிலை குறித்தும் தேவையான பாதுகாப்பு, பந்தோபஸ்து நடவடிக்கை குறித்தும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு ஆலோசகர்களுடன் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தொடர்ந்தும்தலையிட்டு வருவதாக பிரதமர் திரு வி. பி. சிங் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஒருமைப்பாட்டையும், சுதந்திரத்தையும் பேண அரசுதக்க நடவடிக்கை எடுக்குமென்றும் கூறினர்.

## யாழ்ப்பாண நிலைமை பற்றி ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சில முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாண நிலைமைகுறித்து ஆராய்வதற்காக கொழும்பு செல்லவுள்ளனர். இவர்கள் கொழும்பில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளனர். (12)

## "கார்ட்டூன் குர்ரான்" மீண்டும் ஒரு சர்ச்சை

(பாரிஸ்)

டூனீசிய எழுத்தாளர் ஒருவரால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள "கார்ட்டூன் குர்ரான்" என்னும் நூல் முஸ்லிம் மதவாதிகள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

சால்மன் ருஷ்தி எழுதிய "சாத்தானின் வேதங்கள்' என்னும் நூலைப்போல இந்த கார்ட்டூன் புத்தகமும் பெரும் பிரச்னையை ஏற்படுத்தும் என அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யூசுப் சித்திக் என்னும் டூனீசிய எழுத்தாளர் இந்த நூலை மூன்றுபகுதியாக வெளியிட்டிருப்பதுடன் இதனை பிரெஞ்சு, அரபுமொழிகளிலும் வெளியிடவுள்ளார்.

இவர் இந்நூலை கார்ட்டூன் வடிவில் எழுதியதற்குக் காரணத்தையும் இந்நூலில் விளக்கியுள்ளார். "முஸ்லிம்கள் சிறுவயதில் இருந்தே திருக்குர்ஆனை மனப்பாடம் செய்தாக வேண்டும். எனது சிறுவயதில் திருக்குர்ஆனில் எனக்கு எதுவுமே விளங்கவில்லை. எதையும் புரிந்துகொள்ளாமல் கற்பது அபாயகரமானது.

'எனது நோக்கில் தொண்ணூறுசத விகிதமான முஸ்லிம்களுக்கு திருக்குர்ஆன் புரியாத புதிராக இருக்கிறது. எனது சிறுவதுமுதல் திருக்குர்ஆனை சித்திரம் மூலம் விளக்கினால் எல்லோரும் அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்குமென எண்ணி இந்நூலை வெளியிட்டுள்ளேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். (12)

## கொலம்பியாவில்
# போதைவஸ்துஒழிப்புமாநாடு
## அமெரிக்கத் துருப்புகள் பாதுகாப்பு

(புகாரஸ்)

அமெரிக்கத் துருப்புகளின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நேற்று கொலம்பியாவில் போதைவஸ்து ஒழிப்பு மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டில் அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ்சும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இம்மகாநாடு நடைபெற்ற போது அமெரிக்க யுத்தக் கப்பல்கள் கொலம்பியக் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் தலைநகரில் மகாநாடு நடைபெற்ற இடத்தை சுற்றி சுமார் எண்ணாயிரம் இராணுவம் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டது.

இதில் அதிபர் புஷ்சிற்குப் பாதுகாப்பளிக்க வந்த 2000 அமெரிக்க இராணுவமும் அடங்கும். மேலும் அப்பகுதியில் அமெரிக்க விமானப்படை ஹெலிகாப்டர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. கொலம்பியாவில் போதைவஸ்து கடத்தல்காரர்களின் அட்டகாசங்கள் பலமாக அதிகரித்திருப்பதனாலேயே மேற்படி பாதுகாப்பு நடவடிக்கை பலமாக்கப்பட்டிருந்தது.

இம்மகாநாட்டில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் போதைவஸ்து ஒழிப்பு தொடர்பாக பல முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மகாநாட்டைப் பார்வையிட 500க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அங்கு குழுமியதும் குறிப்பிடத்தக்கது

## மேனகாவின் கருணையினால் குரங்கு பிழைத்தது!

திருவனந்தபுரம் பெப். 16

நீதிமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட வளர்ப்புக் குரங்கொன்று அமைச்சரின் கருணையால தப்பிப்பிழைத்தது. இந்த அதிசய சம்பவம் கேரளாவிலுள்ள திருவனந்தபுரம் கிராமத்தில் நடைபெற்றது இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது: "கணேசன்" என்று பெயரிடப்பட்டு செல்லமாக வளர்க்கப்பட்ட குரங்கொன்று வெறி பிடித்து வீதியால் போவோர் வருவோரை கடித்துக் குதறிய போது பொதுமக்கள் பொலிசாரிடம் முறையிட்டனர். பொலிசார் இக்குரங்கை சாக்கொன்றினுள் போட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி குரங்கை உடன் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். குரங்கை வளர்த்தவர் இக்குரங்கைக் கொல்லவேண்டாமென சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் மேனகா காந்தியிடம் முறையிட்டார். மேனகாகாந்தி இம்முறையீட்டை விசாரித்து "கணேசனை" கொல்லவேண்டாமெனவும், அதனை திருவனந்தபுரம் மிருகக்காட்சிச்சாலையில் கொண்டு போய் ஒப்படைக்குமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். குரங்கு பிழைத்தது. (12)

## வீடியோ தியேட்டர்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்ததாகக் கூறப்படும் 'வீடியோ' தியேட்டர்கள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையால் மூடப்பட்டுள்ளன.

இங்கு 75 முதல் 108 வீடியோத் தியேட்டர்கள் நடாத்தப் பெற்றுவந்தன.

## 'யுத்தநிறுத்தம் புலிகளால் கடைப்பிடிக்கப்படுகிறது'
### - அமைதிப்படை அதிகாரி

(வடமராட்சி)

"வடமராட்சியில் புலிகள் பூரணமாக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்" என்று வடமராட்சி இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் துன்னாலை தாமரைக்குளத்திற்கு அருகில் தொலைத் தொடர்பு வயர் வெட்டியவர்களைக் கைது செய்து புலோலி முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டபோது பொதுமக்கள் முன்னிலையிலேயே இதுபற்றி மேற்படி புலோலி முகாம் அதிகாரி கூறியதாகத் தெரியவந்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் "புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, புலிகளாலும், எம்மாலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது" என்றார்.

# பெங்களூர் விமான விபத்து
# உடன் விசாரணைக்கு உத்தரவு
## நஷ்டஈட்டு தொகை அறிவிப்பு

(பெங்களூர்)

பெங்களூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்து பற்றி உடன் விசாரணை நடாத்த உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ்விசாரணைக்கு உதவ ஐரோப்பிய ஏயர் பஸ்நிறுவன நிபுணர் குழு ஒன்றும் பெங்களூர் விரைந்துள்ளது.

இந்த விசாரணைகளுக்கான உத்தரவை மத்திய சிவில் விமானபோக்குவரத்துஅமைச்சர் ஜனுப் ஆரிப் முகமட் கான் நேற்று அறிவித்தார். விமான விபத்து நடைபெற்ற இடத்துக்கு சம்பவத்தினைக்கேள்விப்பட்டதும் அங்குவந்த அமைச்சர் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததுடன் இறந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்றும் அறிவித்தார்.

இதன்படி பலியான வயது முதிர்ந்தோருக்கு தலா 5லட்சம் ரூபாவும், குழந்தைகளுக்கு இரண்டரை லட்சம் ரூபாவும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் காயமடைந்தவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

இவ்விபத்தில் 90 பேர் பலியானதாகவும், 56 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று குழந்தைகளும் உயிர் தப்பியுள்ளன. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விமானத்தில் 139 பயணிகள் உட்பட 146 பேர் பயணம் செய்தனர்.

இவ்விபத்து பற்றி உயிர் தப்பிய பயணி ஒருவர் தெரிவிக்கையில்; விபத்து நடைபெறும் வரை விமானம் சரியாகச் சென்று கொண்டிருந்ததாகவும் விபத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லையென்றும் கூறினர். விபத்தைநேரில் பார்த்த ஒருவர் தெரிவிக்கையில்; பெரும் சத்தத்துடன் விழுந்து நொருங்கிய விமானம் உடனடியாகத் தீப்பற்றிக் கொண்டதாகக்கூறினர்.

மேற்படி விமானம் கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஐரோப்பிய ஏயர் பஸ் நிறுவனத்திடம் வாங்கப்பட்டதாகவும் 400 மணி நேரம் மாத்திரமே இது பறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துயர சம்பவம் குறித்து பிரதமர், ஜனாதிபதி, எதிர்க் கட்சித்தலைவர், அமைச்சர்கள், முதலமைச்சர்களும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

## யாழ். மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், புதிய கட்டிடத் திறப்பு விழாவும் நாளை 17ம் திகதி நடைபெறவுள்ளது.

புதிய கட்டிடத்தை யாழ்ப்பாணப் பிரதேசகல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி திறந்துவைப்பார்.

மாலை பரிசளிப்பு விழா நடை பெறும்.

இவ்விழாவில் யாழ்ப்பாண கோட்டக்கல்வி அதிகாரி திரு சி. தியாகராசா, கல்வித் திணைக்கள ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி பரவலாக்கத்திற்கான பிரதமபொறியியலாளர் திரு. கே. இரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வார்கள். (12)

## யாழ். ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு நீங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்போது போதியளவு மருந்து வகைகள் கையிருப்பில் இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிபர் செல்வி சண்முகம் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நேரடியாகவே தற்போது மருந்து வகைகள் எமக்குக் கிடைப்பதினால், நீண்டகாலமாக இருந்துவந்த மருந்துத் தட்டுப்பாடு தற்போது ஓரளவுக்கு நீங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையுணர்வு குன்றியதே அமைதியின்மைக்கு காரணம்

## திருத்தல யாத்திரை விழாவில் உரை

(சுன்னுகம்)

''ஆயுதபலம் மூலம் சாதிக்க முடியாதவற்றை ஆத்மீகபலம் மூலமும் சாதிக்கமுடியும். அருளாளர்கள் காட்டிய பாதையில் வாழ்ந்து, சிவதர்மத்தை உலகில் மிளிரச்செய்வோம்.''

இவ்வாறு வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற திருத்தலப் பாதயாத்திரைப் பூர்த்திவிழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்.

விழாவிற்கு முன்னதாக சுன்னுகம்சந்தி முனியப்பர் கோவிலில் இருந்து மேளவாத்தியம் சகிதம் திருமுறை நாதம் ஒலிக்கச் சிவனடியார்கள் புடைசூழ ஆத்மஜோதி நா. முத்தையா சுன்னுகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

ஊர்வலத்தை அடுத்து சுன்னுகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு முன்னுள் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு தி.மாணிக்கவாசகர் தலைமைவகித்தார்.

தொடர்ந்து பேசிய ஆதீன சுவாமிகள் கூறியதாவது:

''உலகில் மக்கள் அமைதியின்றி வாழ்வதற்கு காரணம் இறையுணர்வு மக்கள் மத்தியில் குன்றியதே. அருளாளர் காட்டிய வழிநின்று ஆத்மீக பலத்தின் மூலம் எதனையும் சாதிக்கமுடியும் என்பதை இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் உலகறியச் செய்யவேண்டும். தர்ம உணர்வு மக்களோடு இரண்டறக் கலந்து, தர்மசீலர்களாக வாழ இறைவனின் திருவருள் நிரம்பக் கிடைக்க வாழ்த்துகிறேன்.'' என்றார்

வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் பேசுகையில், ''போர் மேகத்தின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட திருத்தல யாத்திரை அமைதியான சூழலில் நிறைவுபெறுவது ஆத்மீக பலத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்'' என்றார்.

ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சக்திகிரீவன் பேசுகையில், ''இளைய தலைமுறையினரை முதியவர்கள் அன்போடு அரவணைத்துச் செல்லவேண்டிய காலமிது என்றும், இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள உடல், உளத் தாக்கங்களை ஆத்மீகத் தலைவர்கள் நன்கு புரிந்துணர்ந்து அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டும்'' என்றார்.

ஆத்மஜோதி நா. முத்தையாவிற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பொன்னடை போர்த்தி, பொற்கிளி வழங்கினர்.

விழாவில் பண்டிதர் கா. நமசிவாயம், திரு. வ.பேரின்பநாயகம், முன்னாள் மகாஜனக் கல்லூரி அதிபர் க.கந்தையா, ஸ்ரீவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் உரையாற்றினர்.

## 2.64 கோடி ரூபா நிதிஉதவியில் வலி. வடக்கு பகுதியில் அபிவிருத்தி வேலைகள்

(காங்கேசன்துறை)

வலி-வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் 2.64 கோடி ரூபா நிதியுதவியுடன் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது,

வலி-வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் வரும் காங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய உப அலுவலகங்களின் பிரதேசத்தில் வீதி புனரமைப்பு, கட்டிடங்கள் புனரமைப்பு போன்ற அபிவிருத்தி வேலைகளை மேற்படி நிதியுதவியுடன் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண புனர் வாழ்வு அமைச்சின் 1989ம் ஆண்டுக்கான புனர்வாழ்வு, புனருத்தாரண வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மேற்படி வேலைகளை துரிதகதியில் நிறைவேற்ற வலிவடக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு வை. இராசையா, பிரதேச சபை தொழில் நுட்ப அத்தியட்சகர் திரு. சு. நித்தியானந்தன் ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள். சன சமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக இப்புனரமைப்பு வேலைகளைச் செய்துமுடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை உபஅலுவலக எல்லைக்குள் வீதிகள் திருத்துதல் 6 லட்சத்து 76ஆயிரம் ரூபா செலவிலும், கட்டிடங்கள், சிறுவர் பூங்கா போன்றவை திருத்துதல் 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவிலும்மேற்கொள்ளப்பட உள்ளன.

தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் வீதிகள் திருத்துதல் 5 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவிலும், கட்டிடங்கள் திருத்துதல் 2லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவிலும் மேற்கொள்ளப்படஉள்ளன.

மயிலிட்டி உபஅலுவலக எல்லைக்குள் வீதிகள் திருத்துதல் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிலும் கட்டிடம் திருத்துதல் 32 ஆயிரம் ரூபா செலவிலும் மேற்கொள்ளப்படஉள்ளன,

மல்லாகம் உப அலுவலக எல்லைக்குள் வீதிகள் மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ள 3 இலட்சத்து 64 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (86)

## நியமனம்

(மன்னர்)

மன்னால் இவ்வருடம் புதிய உதவி அரச அதிபர் பிரிவாகப் பிரிக்கப்பட்ட மடு பிரிவுக்கு உதவி அரச அதிபராக திரு. எஸ். நித்தியானந்தன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் மன்னர் புனர்வாழ்வு அலுவலகத்தில் பதவிநிலை அலுவலராகக் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (85)

## "உயிர்த்துடிப்புள்ள சமுதாயம் உருவாக சமயப்பற்று அவசியம்"

(யாழ்ப்பாணம்)

''சமய நெறியை வளர்க்கவும். சமயத் தொண்டு செய்யவும் எம்மை அர்ப்பணிக்க முன்வரவேண்டும். மனித குலத்துக்குச் சமயப்பற்று இன்றியமையாதது. உயிர்த்துடிப்புள்ள சமுதாயம் உருவாகவேண்டுமானால் சமயப்பற்றை மக்களிடம் உருவாக்க வேண்டும்''

யாழ். சைவத் தொண்டர் நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

நிலைய அமைப்பாளர் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் இவ் அங்குரார்ப்பண விழா நடைபெற்றது.

திருநெல்வேலி வடக்கு நாவலடி ஒழுங்கையில் இச் சைவத் தொண்டர் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது: உதவி அரச அதிபர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''நாம் எமது சமயப் பண்பாட்டைப் பேணிக்காக்கவேண்டும். எம்மிடையே நாவலர் பெருமான் போன்ற உத்தமர்கள் தோன்ற வேண்டும். அப்பொழுதே சமயமும் சமயக் கொள்கைகளும் பாதுகாக்கப்படும். சமயத்தின் கொள்கைகளே மனிதகுலத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றன. சைவத்தொண்டர் நிலையம் ஆரம்பிப்பது முன்மாதிரியான முயற்சியாகும், இதுபோன்ற பல சைவத்தொண்டர் நிலையங்கள் உருவாகவேண்டும்''

நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில், ''சைவ மக்கள் சிவசின்னங்களை அணியவேண்டும். சைவப்பணி செய்யும்போது சிவசின்னங்கள் அணிந்தே தொண்டு செய்யவேண்டும் நாம் விபூதி, சந்தனம் போன்ற எமது சமய சின்னங்களைத் தரிக்கவேண்டும். சைவசமயத்தவர்கள் அனைவரும் சிவதீட்சை செய்து கொள்வதின் மூலம் உண்மையான சைவசமயிகளாகத் திகழமுடியும்'' என்று கூறினர்.

திரு. தெ. ரதீஸ்வரன், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் துணைச் செயலாளர் சி: சி4 வாதராசா. சிவ ஆறுமுகசாமி, மாவட்ட சாரணர் உதவி ஆணையாளர் இ. தவகோபால் உட்பட வேறு பலரும் பேசினர். (54)

## ஆலயம் புனரமைப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு வீரபத்திரர் கோவில் மண்டபங்கள் சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டை மேற்கு சிவன் கோவிலடியைச்சேர்ந்த திரு. இலட்சுமணர்கோணேஸ்வரன் இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கான செலவினத்தைப் பொறுப்பேற்றுள்ளார்.

## 28 குடும்பங்களுக்கு 15,000 ரூபா வழங்கப்படும்

(கொக்குவில்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபரினால் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் கொக்குவில் மேற்கு கிராம சேவகர் பிரிவில் 28 குடும்பங்களுக்கு 15000 ரூபா நன்கொடையாக வழங்கப்படவிருக்கின்றது. (135)

## யாழ்.மாநகரசபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

''யாழ்.யாநகரசபை ஆணையாளரின் முயற்சியில் மைதானம் தற்போது சீரமைக்கப்பட்டதால் வருங்காலத்தில் எமது கல்லூரியின் விளையாட்டுப் போட்டிகளை உரிய நேரங்களில் நடாத்தக் கூடியதாக இருக்கும்'' என யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. வி. ரி. கணேசலிங்கம் தெரிவித்தார். (வி)

## யாழ். மாவட்டத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவிலும் நூற்றிஇருபத்திநாலு வீடுகள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், நாற்பத்தேழு வீடுகள் ஊர்காவற்றுறையிலும், முப்பத்திரெண்டு வீடுகள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. (12)

## வடமராட்சியில் 'காத்தவராயன்'

(புலோலி)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் தமிழ் மக்களின் பாரம்பரிய நாடகமான 'காத்தவராயன்' இம் மாதம் 18ம் திகதி பருத்தித்துறை சிவன்கோவில் பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் மேடையேற்றப்படும். (61)

## உலகத் தமிழ் மருத்துவக் கல்லூரி

(சென்னை)

உலகத் தமிழ் மறுமலர்ச்சி சம்மேளனம், மொரீசியஸ் தீவில் உலக தமிழ் மருத்துவக் கல்லூரியொன்றை நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது மொரீசியஸ் தீவில் எதிர்வரும் 25ம் திகதி இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளது.

# வடக்கு, கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சிநெறிக்கு தெரிவானோர் விபரம்

(திருமலை)

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் 164பேருக்கு முகாமைத்துவ பயிற்சி நெறியை வழங்கி முகாமைத்துவ நிர்வாக சேவைகளில் அமர்த்த மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக பிரதம செயலாளர் திரு. வே. ந. சிவராசா தெரிவித்தார்.

முதற்கட்ட பயிற்சிக்காலத்தில் மாவட்ட நிர்வாகத்தில் போதிய அறிவினைப் பெறும் பொருட்டு மாவட்ட ஆணையாளர்களின் கீழ் பயிற்சி வழங்கப்படும். அவ்வேளை உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும்பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின்போது அலவன்ஸ் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு:

திரு ஜே. எக்ஸ். செல்வநாயகம், திரு எம் தனராஜா, செல்வி வி. வனஜா, திரு. கே. ஜெகதீஸ்வரன். செல்வி எஸ். வசந்தகுமாரி. திரு. பெரஸ்யூட் செல்வராஜன்குலஸ். செல்வி மரினு யூலியட் ஜேசுரெட்ணம், திரு சந்தியா அன்ரன் மொறுய்ஸ், செல்வி மேதினி சந்திரசேகரம், செல்வி வித்தியா பத்மநாதன், செல்வி சரஸ்வதி கணபதிப்பிள்ளை, செல்வி மதிவதனி கதிரவேலு, செல்வி லோதீஸ்வரி வைத்திலிங்கம், திரு. வேதநாயகம் லூட் நவீன் ராஜ், திரு.எஸ் பிரபாகரன், செல்வி விஜயலெட்சுமி சுப்பிரமணியம், திரு. பி. மத்தாஸ் பிள்ளை, திரு. எஸ். சத்தியசீலன், செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை, செல்வி ஜெசீமா இப்ருகிம், செல்வி குமுதா சிங்கரெட்ணம், செல்வி [illegible] பிள்ளை, செல்வி வித்திய பூரணி சிவபாதசுந்தரம், திரு. எஸ். விவேகானந்தராஜா, செல்வி கிருஷ்ணதயாநிதி மாணிக்கம், திரு. சிவகுருநாதன் உதயகுமாரன், செல்வி கிருபாஞ்சனு ஈசுரபாதம், திரு. சிவநேசன் குகபாலன். செல்வி சியாமளதேவி சேனுதிராஜா, செல்வி ருத் அருளினி செல்வரெட்ணம், செல்வி றஞ்சிதமலர் சுப்பிரமணியம், செல்வி திகாமலர் சீவரெட்ணம், செல்வி ஜானகி குணரெட்ணம, திரு. சுப்பிரமணியம் கலைச்செல்வன், செல்வி ஜி. சௌந்தரி, திரு. கே. டானியல் நிர்மலராஜ், திரு. வைரமுத்து சிவானந்தன், செல்வி பத்மராஜினி மார்க்கண்டு, செல்வி மாலதி பரசுராமன், திரு. கமிலஸ் பெலிசியன், செல்வி சரவணமுத்து அமிர்தகலாதேவி, செல்வி செல்வத்துரைவசந்தி, செல்வி வினோதா துரைராஜா திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன். திரு. மகாலிங்கம் புஸ்பவர்ணன், திரு. எஸ். சண்முகவடிவேல், செல்வி பாக்கியலெட்சுமிகுமாரசாமி, செல்வி ஜெயந்தி துரைரெட்ணம். செல்வி விஜயலெட்சுமி டி. துரைசாமி, திரு. எஸ். ஜே. மரியதாஸ் செல்வி சட்டமாதேவி பாலசுந்தரம், திரு, கே, சச்சிதானந்தம், திரு. சி. ஜே. இராஜதுரை, செல்வி சிறீசுசிகலா கனகரெட்ணம், திரு. எஸ். ரவிச்சந்திரன், திரு கே. சத்தியசீலன், திரு. எம். லோகசிங்கம், திரு. எஸ். பாஸ்கரன், திரு. தியாகராஜா மோகனகுமார், திரு. எஸ். சரவணபவன், திரு. டி. நடேசநாதன், செல்வி ஜெயகௌரி பொன்ராஜா, திரு வி. கருணநிதி.

(மிகுதி நாளை)

## விஜயகுமாரணதுங்கா நினைவுக்கண்காட்சி

(கொழும்பு)

பிரபல நடிகரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவருமான விஜயகுமாரணதுங்காவின் 2வது நினைவு தினத்தையொட்டி நேற்று முன்தினம் கொழும்பு பொது நூலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் கண்காட்சியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது,

இந்தக் கண்காட்சியில் புகைப்படங்கள், ஓவியங்கள், விஜயகுமாரணதுங்காவினல் பாவிக்கப்பட்ட பொருள்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன.

## மஞ்ச உற்சவம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை கவளாவத்தை ஞானவைரவர் சுவாமி கோவில் மஞ்ச உற்சவம் நாளை 17ம் தேதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 8ம் திகதி இவ்வாலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 22ம் திகதி இடம்பெறும் சங்காபிஷேக விழாவுடன் உற்சவம் பூர்த்தியடையும். (86)

## 'நடந்து வந்த பாதை'

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப்பகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசார பகுதியினரால் ''நடந்து வந்த பாதை'' என்னும் பொருள் பற்றி வில்லிசை நிகழ்த்தப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை 8 மணியளவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. (101)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பனந்தும்பு தொழிற்சாலைகளில் 3000 பேருக்குவேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பனந்தும்புக்கு உள்ளூரிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்டு வரும் கிராக்கியை ஈடு செய்வதற்காக பனை அபிவிருத்திச்சபை நூறு பனம்தும்பு பயிற்சிநிலையங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பயிற்சி நிலையங்களில் மூவாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

இப்பயிற்சி நிலையங்கள், பனை உற்பத்தி ஏற்றுமதி கிராம கம்பனிகள், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மன்னார், முல்லைத்தீவு வவனியாமாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பை இறுதிநிலை சுத்திகரிப்புக்கான நிலையமொன்று வவுனியாவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பனை அபிவிருத்திச் சபை இரண்டுலட்ச ரூபாவைச்செலவிடும்.

மாசச் மாதம் இரண்டாம் திகதி மந்துவில், வரணி, பூநகரி, கிராஞ்சி ஆகிய பகுதிகளில் பனந்துப்பு பயிற்சிநிலையங்கள் ஆரம்பமாகவுள்ளது. (12)

# வறிய மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சாவகச்சேரி அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. பி கே பாப்பா நேற்று நடந்த தென்மராட்சி மாணவர் அமைப்பு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் திரு. வீ. முருகதாஸ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் ''எமது தமழீழ விடுதலைப் போராட்டம் எக்காலத்திலும், கல்விக்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாது'' என்றார்.

தென்மராட்சி மாணவர்களின் சார்பில் செல்வி சிவரமணி, செல்வன் வ. பஞ்சலிங்கம். தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. என். இரஞ்சன் உட்பட பலர் பேசினார்கள். (82)

# சிறிமா திருப்பதியில் வழிபடுவார்

(சென்னை)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றுதிருப்பதிபயணமானார்.

இன்று திருப்பதி வெங்கடேஸ்வரனை திருமதி சிறிமா வழிபாடு செய்வார்.

சுவாமிமலை, திருச்செந்தூர், காஞ்சிபுரம், திருத்தணி ஆகிய ஆலயங்களுக்கும் சென்று அவர் வழிபாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# முறைசாராக்கல்வி புதிய பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி புதிய பயிற்சிகள் அடுத்த மாதம் 13ம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# "யாழ் மாவட்டத்தில் கொலை, கொள்ளைச்சம்பவம் குறித்துமுறைப்பாடு இல்லை" - பொலிஸ் அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது கொலை, கொள்ளைச் சம்பவங்கள் மிகவும் குறைந்துள்ளது என்று யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராஜா 'ஈழநாடுக்கு' தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது கடந்த சில வாரங்களாக யாழ் மாவட்டத்தில் எந்த இடத்திலாவது கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதாக பொது மக்களிடமிருந்து எந்த ஒருமுறைப்படும் கிடைக்கவில்லை.

யாழ். நகரில் புதிய பொலிஸ் நிலயமும் புதிய பொலிஸ் விடுதியும் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான மதிப்பீடு வேலைகள் தற்போது ஆரம்பிககப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப்படையினர் முற்று முழுதாக வடமாகாணத்திலிருந்து வெளியேறும் வரை புதிய பொலிஸ் நிலையங்களை திறக்கும் யோசனை அரசாங்கத்துக்கு தற்போது இல்லை எனவும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார். (வி)

# அவசரகாலச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துச் செய்துவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது

அவசரகாலப் பிரமாணம் 43ம் விதிப்படி பயணச் சீட்டு அல்லது விசேட அனுமதிச் சீட்டு இன்றி ரயில்வண்டி அல்லது வேறு ஒரு வாகனத்தில் பிரயாணம் செய்வது நேற்று நள்ளிரவில் இருந்து ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (து)

# அமைதிப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியின் பலபகுதிகளிலிருந்தும் அமைதிப்படையினர் வாபஸ் பெறுவதற்கு முன்னர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டனர்:

விடுதலை செய்யப்படவிருக்கும் இந்த 700பேரும் பிரஜைகள் குழுக்களின் முன்னிலையில் வைத்து அவரவர் பெற்றோரிடம் கையளிக்கப்படுவர். (பெ)

# எந்தவித

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 68 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகாரிகளும், சிப்பாய்களும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் விரைவிரைவில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையினர் வாஸ் பெற்றபின்னர் உத்தேச நட்புறவு ஒப்பந்தம் சம்பந்மாக இருநாடுகளும் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும், அவை பாரதூரமானவை அல்ல. இரு தரப்பினரும் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த அமைச்சர் ரஞ்சன், எல் ரி. ரி. ஈ.யின் குறைந்த தரத்தில் உள்ளவர்களை ஒழுக்க நெறிகளைப் பின்பற்றச்செய்ய வேண்டும் என்று கூறி, இதனைச் செய்வது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடமை என்றார்.

அவர்கள் பிரச்சனைகளைக் கிளப்பினால், நாமும் பிரச்சனைகளை உருவாக்கவேண்டிவரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

# இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1989ம் ஆண்டு பயிற்சிகளை ஆரம்பித்த முறைசாராக் கல்வி மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை மார்ச் 1ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. அதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்குமாறு கல்வித்திணைக்களம்கேட்டுக்கொண்டுள்ளது. (எஸ்)

# ஆரம்ப விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் எதிர் வரும் 19-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்ப விரிவுரை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பேராசிரியர் திருமதி ரி. சரவணபவானந்தன் மேற்படி விரிவுரையை நிகழ்த்துவார் 'மருத்துவ முகாமைத்துவத்தில் அண்மைக்காலப் போக்குகள்' என்ற தலைப்பில் இந்த விரிவுரை நிகழ்த்தப்படும். (பெ)

# யாழ். வைத்தியசாலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிடமோ தெரிவிக்கும்படி கூறிக் கைவிரித்துவிட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியை மேற்படி குழுவினர் அரசாங்க அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி, ஐந்து மாடிப் பகுதியில் தற்காலிகமாக இரண்டுமாடிப் பகுதியையாவது பூர்த்திசெய்து தரும்படி கேட்டதற்கும், அரசாங்க அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துவிட்டதாகவும், இரண்டு மாடிக் கட்டடத்தை பூர்த்திசெய்வதற்கு இன்னும் எட்டு லட்சம் ரூபாய்தேவைப் படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (வி)

# புலிகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை பிடிகாரர்கள் இல்லை என்பதை எல்லோரும் அறிவார்கள்.

எம்மிடம் சேரும் பிள்ளைகள் நல்லவர்களாகவும், நாட்டைக் காக்கும் வல்லவர்களாகவும் உருவாக்குவோம்.

அவசியம் ஏற்படின் அவர்கள் கல்வியினைத் தொடரவும் வாய்ப்பளித்து தரமுயர்த்துவோம் என்றும் கூறினர். (51)

# இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது.

இவர்களில் சிலர் இன்னும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பூசாமுகாமினூடாக விடுதலை பெற்று வந்த அந்த திருமலை இளைஞர் தெரிவித்துள்ளார்.

தானும், தமது சகோதரர்களும் அகதிகளாக கடலில் சென்ற சமயம், இலங்கை இராணுவத்தினர் அவர்களை நோக்கி சுட்டபோது தான் மட்டும் மயக்க நிலையில் இராணுவத்தினரிடம் சிக்கியதாகவும் தன்னுடன் வந்த ஏனையோர் பற்றிய விபரம் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில், தன்னுடன் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் அங்கு சிறை வைக்கப்பட்டதாகவும் அவர்களில் அனேகமானோர் கடலில் கைதானவர்கள் எனவும் தெரிவித்தார்.

தங்களைச் சிறைவைத்துள்ள இடம் பூசாமுகாமோ, வெலிக்கடைச்சிறையோ அல்லவென்றும் கொழும்பு நகருக்கு அண்மையில் உள்ள ஏதோ ஒரு காட்டுப்பகுதியிலேயே சிறைவைக்கப்பட்டதாகவும் அக்காட்டைக்கூட கைதிகளாக்கப்பட்ட தம்மைக்கொண்டே துப்பரவு செய்வித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் மாற்று இடமாக பூசாவிற்கோ, அல்லது வெலிக்கடை போன்ற இடங்களுக்கு தம்மைக்கொண்டு செல்கையில் கண்ணைக்கட்டிய நிலையிலேயே கொண்டு செல்வார்களென்றும் தெரிவித்தார்.

இந்த இளைஞர் விமான மூலம் பலாலி வந்து அங்கிருந்து வல்வை வந்தபோது இவரிடம் பாதிப்புற்ற மக்கள் பலரும் தமது உறவினர்களைப் பற்றி விசாரித்தபோது அவர் மேற்கண்டதகவல்களைத் தெரிவித்தார். சிலர் காட்டிய புகைப்படங்களில் உள்ளவர்களையும் அவர் அடையாளம் காட்டியுள்ளார். இவரது தகவல்களைத் தொடர்ந்து பலர் கொழும்பு சென்றுள்ளார்கள்.

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு தம்பிராசா

வட்டுக்கோட்டை மேற்கு, சிவன்கோவலடியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரும், சமூக சேவையாளருமாகிய மார்க்கண்டு தம்பிராசா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் (ஆசிரியை) கணவரும், கதிர்காமநாதன் (அதிபர், இலுப்பைக்குளம் மகாவித்தியாலயம்), செந்தில்நாதன் (புகையிரத நிலைய அதிபர், திருகோணமலை), சசிதரநாதன் (சவூதி அரேபியா), திருமதி கோகுலநாயகி சச்சிதானநதம், திருமதி சற்குணநாயகி பரமநாதன் (ஆசிரியை, கல்முனை), திருமதி சடாட்சரநாயகி மகேஸ்வரன் (இளைப்பாறிய இறைவரி உத்தியோகத்தர்), திருமதி வரிகிலைநாயகி பரமானந்தசிவம். திருமதி கடாட்சரநாயகி நடராசா, திருமதி கிரிசைநாயகி (ஆசிரியை, வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள்

தகவல்: மு. சச்சிதானந்தம். (சி 550)

## கோபாலபிள்ளை குலசேகரம்

(சுருவில்)

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பொற்பதி றோட், கொக்குவிலில் வசிப்பவருமாகிய கோபாலபிள்ளை குலசேகரம் 14-2-90- புதன்கிழமை காலமானார். இவர், காலஞ்சென்ற சுருவில் கோபாலபிள்ளை, இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி குருசாமி, திருமதி நாகரத்தினம் குருசாமி தம்பதிகளின் அன்பு மருமகனும். கருணாம்பிகை, ரவீந்திரன் (Engineer), நரேந்திரன் (Engineer), சியாமளா, காயத்திரி, முரளிதரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், தம்பிஐயா (நடராசா) மரகதவல்லி, மகேந்திரன் (Accountant) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகநாதன் (Civil Engineer), மனோகரன் (Architect), மீனாட்சி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனும், ஹரிகரன், தாரணி, குமரன், செந்தூரன், ராகவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி பரமேஸ்வரி குலசேகரம். (சி 551)

## திரு. ஆறுமுகம் பொன்னையா

(மல்லாகம் நீதிமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னையா 15-02-90ல் காலமாகிவிட்டார் இவர் திரு. ஆறுமுகம் தம்பதிகளின் மகனும், வள்ளிப்பிள்ளையின் கணவனும், சிவபாதம், லீலாவதி (வைத்திய சாலை, தெல்லிப்பளை), தர்மதேவன், புனிதவதி (கனடா), புஸ்பவதி ஆகியோரின் தகப்பனாரும், புஸ்பராணி (உசன்), குணராசசிங்கம் (ஓமான்), தயாவதி சிவானந்தராசா (கனடா), கமலானந்தன் ஆகியோரின் மாமனாரும், பிரகாசினி, ஜெகபாலினி, ஜினேசன், சுபாங்கினி, லதாங்கினி, நர்மதாங்கினி, நிருஷன், நிவேதிகா, நிஷாந்தன், லவுஷா, டக்சன், கனெக்ஸ், கிஷாந், லக்ஷலா, சுலக்ஷினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-02-1990) வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100386/81. Eelanadu P. O Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org